D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.96/2022

**P.W**.2

| | |
|---|---|
| Name | : திரு.மனோகரன் |
| Father/Husband Name | : திரு.எட்டி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2024

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வெண்புருஷம் கிராமத்தில் குடியிருந்து மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த துரைகண்ணு என்னுடைய பெரியப்பா ஆவார்.

2. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது பெரியப்பா துரைகண்ணு வெண்புருஷம் நோக்கி சூப்பர் வைசரில் இரு சக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்த போது மாமல்லபுரம் பி டபுள்யு டி சாலையில் பகல் 1.30 மணிக்கு சென்றுக் கொண்டிருந்த போது டாடா இண்டிகா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன். அவருக்கு தலையிலும் உடலிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை சிகிச்சைக்காக முதலில் பூஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பின் செங்கல்பட்டு அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சுமார் ஒரு வாரம் கழித்து சிகிச்சை பலனில்லாமல் துரைகண்ணு இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் சொல்லிக் கொடுத்தன் அடிப்படையில் முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. உறவினருக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

(Sd) A.Kadhiravan
J.M./TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.96/2022

**P.W**.3

| | |
|---|---|
| Name | : **திரு.டில்லி** |
| Father/Husband Name | : திரு.முனுசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2024

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வெண்புருஷம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி எட்டியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 06.11.2020 அன்று பகலில் என் மாமா துரைகண்ணுவிற்கு மாமல்லபுரம் பி டபுள்யு டி சாலையில் விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதில் நானும் எட்டியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சாட்சி எட்டியும் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் ஆவணத்தில் காவல் நிலையத்தில்

வைத்து கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். இறந்துபோனவர் உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

(Sd) A.Kadhiravan
J.M./TKM.